# புத்தளம் நகர சபை

## புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 செப்தெம்பர் 11 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 யூன் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள புத்தளம் நகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) நிதிக்கூற்றுக்களில் கைவிடல்கள்**

நகர சபைக்குரிய காணி கட்டிடங்களின் பெறுமதியும், அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற 14.8 கி.வா இயக்கத்தைக் கொண்ட மின்னுற்பத்தி மற்றும் ஏனைய இயந்திரங்களின் பெறுமதியும், நூலகத்தின் 919 புத்தகங்களும் பெறுமதியான ரூபா 72,420 தொகையும் கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தன.

**(ஆ) நிதிக்கூற்றுக்களில் குறைத்து மற்றும் அதிகரித்துக் காண்பித்தல்**

பெறவேண்டிய முத்திரைக் கட்டண மதிப்பீடான ரூபா 564,250 தொகையும், பெறவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 713,033 தொகையாலும் வருமானக் கடன்பட்டோர் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 1,488,989 தொகையாலும் செலவினக் கடன்கொடுத்தோர் மீதியின் ஆரம்ப மீதி ரூபா 310,433 தொகையாலும், பெறுமதி சேர் வரிக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 430,000 தொகையாலும் திரண்ட நிதியத்தின் ஆரம்ப மீதி ரூபா 1,456,052 தொகையாலும் கணக்குகளில் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 83,816,438 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

05 கணக்கு விடயங்களுக்கு உரித்தான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53,161,800 ஆனதுடன் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37,883,657 ஆனமையால் ரூபா 15,278,143 தொகையான வேறுபாடு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

**1.3.4 செலுத்தப்பட கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 65,823,688 தொகையானதுடன் இதில் ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 51,067,569 தொகையாகக் காணப்பட்டன.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக நகர சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,804,547 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,204,986 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 79,035 | 18,026 | 61,009 |
| (ii) | வாடகை | 47,269 | 24,608 | 22,661 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,881 | 968 | 3,913 |
| (iv) | ஏனைய வருமானம் | 44,776 | 12,407 | 32,369 |

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணப் பெறுமதி ரூபா 4,000,000 தொகையாகக் காணப்பட்டது.

### 2.2.3 கடை வாடகை

புத்தளம் பஸ் தரிப்பு நிலையத்தின் 23 கடைகளிலிருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 9,989,350 தொகை பல வருட காலமாக அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டன.

### 2.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) பொது களஞ்சியத்தில் நிலவிய ரூபா 39,750 பெறுமதியான 13 ஜீஜ குழாய்களும் 300 சீமேந்துக் கற்களும் காணாமற் போயிருந்தமையால் சபைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தன.

(ஆ) நகர சபைக்குரித்தான புத்தளம் பொது நூலகத்தில் காணப்பட்ட 156 புத்தகங்கள் காணாமற் போனமை மற்றும் 53 புத்தகங்கள் வாசிப்பாளர்களால் மீள வழங்கப்பட்டிராமை போன்ற காரணங்களால் ரூபா 28,959 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 10,373 தொகை உரிய நூலக உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 18,586 தொகை சபைக்கு நட்டமாகக் காணப்பட்டது.

### 2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்

ரூபா 250,000 பெறுமதியான எச்சீஎம் 99 கைஉழவு இயந்திரம் 12 ஆண்டு காலமாகவும், பெறுமதி மதிப்பிடப்பட்டிராத 47 – 2853 ஆம் இலக்க கன்டர் வாகனம் ஒரு வருட காலமாக விளைவற்று குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்**

2012 திசெம்பர் 31 இல் உற்றவாறு அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,643,975 தொகையாகக் காணப்பட்டது. இதில் இறந்த, ஓய்வு பெற்ற, சேவையை விட்டு விலகிச் சென்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 79 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் பெறுமதியான ரூபா 183,154 தொகை 10 ஆண்டுகளுக்கு மேலான காலமாக அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டன.

**(ஆ) பெறவேண்டிய கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 119,954,352 ஆகக் காணப்பட்டதுடன் 01 வருட காலத்திற்கு மேலான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 107,086,469 ஆகக் காணப்பட்டது.

**(இ) தீர்க்கப்படாத முற்பணம்**

2001 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை சபையின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக செலவினம் ஏற்கப்பட்டமைக்காக 18 பேருக்கு சபை நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 544,838 தொகையான முற்பணத் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அசைவற்றுக் காணப்படும் 05 நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,365,278 ஆகக் காணப்பட்டது.

## 2.6 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 ஆம் ஆண்டிற்காக சேகரிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு குறித்த தினத்தில் அனுப்பி வைக்கப்படாது கையில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 21,681 தொகையான தண்டப்பணம் நகர சபைக்கு நட்டமாகக் காணப்பட்டது.

(ஆ) வடமேல் மாகாண நிதிய விதி 120.1.2 இன் பிரகாரம் 2004 ஆம் 2006 ஆம் ஆண்டுகளின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 539,886 பெறுமதியான 07 காசோலைகள் மதிப்பிழந்திருந்தன. அவ் மதிப்பிழந்த காசோலைகளுக்காக பணம் அறவிடப்படுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வடமேல் மாகாண நிதிய விதி 283 இன் பிரகாரம் 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 249,357 பெறுமதியான 236195 ஆம் இலக்க மற்றும் 2010 நவம்பர் 24 ஆம் திகதிய காசோலை வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 மே 13 ஆம் திகதிய வடமேல் மாகாண பிரதம செயலாளரின் 5/3/நிதிச்சுற்றறிக்கை/2010 இன் பிரகாரம் காலாவதியான மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் ரூபா 23,558,286 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1996 இன் 34 ஆம் இலக்க பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், பல வருட காலமாக அறவிடப்பட்டிருந்த பண்டங்கள் மற்றும் சேவைகள் வரித் தொகையான ரூபா 1,209,068 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படாது கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) நகர சபையால் தமது செயற்திட்டத்திற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தவணைப் பணம் மீளச் செலுத்தப்படுகையில் நீண்ட காலதாமதம் காணப்பட்டன.

(எ) 2006 ஆம் ஆண்டின் போது சேவையிலிருந்து விலக்குதல், சம்பளம் செலுத்தப்படாமை என்பதற்காக மாநகர சபை ஊழியர்கள் இருவரால் சபைக்கு எதிராக தொடரப்பட்ட நட்டஈட்டு வழக்கின் படி ரூபா 249,356.62 தொகையான நட்டஈடு நகர சபைக்குச் செலுத்தப்படுவதற்கு இருந்த போதிலும் இது செலுத்தப்படாது இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் அவ் ஊழியர்களால் இதற்கு எதிராக புத்தளம் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விவாதத்தில் இருந்தமையால் நட்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பாக நகர சபை நிகழத்தக்க பொறுப்பைப் பேணியிருந்தது. இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் எவ்வித பதிவும் இடம்பெற்றிருக்கவில்லை.

**2.7 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவகத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்